# 8 இடங்களில் அகழ்வாராய்ச்சி! - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது. நம்முடைய அகழாய்வு முடிவுகள் பெரும் உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது. குறிப்பாக, மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகளில், சிந்துவெளி எழுத்துக்களின் ஒப்பீட்டளவில் ஒற்றுமைகள் காணப்படுகின்ற இந்த மேடையில் வெளியிடப்பட்ட ஆய்வு நூல் விரிவாக விளக்குகிறது.

சிந்துவெளி நாகரிகத்தில், வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட முத்திரைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகளையும், தமிழ்நாட்டில் அகழாய்வுகளில் கிடைக்கும் குறியீடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 60 விழுக்காடு குறியீடுகள் ஒரே தன்மையிலான குறியீடுகளாக காணப்படுகிறது. அதேவேளையில், சிந்துவெளியில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் குறியீடுகளும், தமிழ்நாட்டில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் குறியீடுகளும், அதிகபட்சமாக 90 விழுக்காடு ஒரே தன்மை கொண்டவையாக காணப்படுகிறது என்று நம்முடைய தொல்லியல் ஆய்வாளர்கள் இப்போது நிறுவியிருக்கிறார்கள்.

சிந்துவெளியில் கிடைத்த சூதுபவளம், அகேட், நீலப் பளிங்குக் கற்கள் ஆகியவற்றால் செய்யப்பட்ட கல்மணிகள், உயர் வெண்கலப் பொருட்கள் மற்றும் கருப்பு, சிவப்பு மட்கலன்கள், நீத்தாரை புதைக்கும் வழக்கம் போன்ற பண்பாட்டுக் கூறுகளின் எச்சங்கள், தென்னிந்தியாவுக்கும், சிந்துவெளி நாகரிக்கத்துக்கும் இடையேயான பண்பாட்டுத் தொடர்பை, தொடர்ச்சியை உறுதிசெய்கிறது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று, அண்மையில் சிவகளை, ஆதிச்சநல்லூர், மயிலாடும்பாறை, மாங்காடு, தெலுங்கானூர், கீழ்நமண்டி போன்ற இடங்களிடல் கிடைத்த அறிவியல் காலக்கணக்கீடுகள் சிந்துவெளி நாகரிகமும் தமிழ்நாட்டின் இரும்புக் காலமும் சமகாலத்தவை என்பதை உறுதிசெய்கிறது என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**மூன்று முத்தான அறிவிப்புகள்!**

அறிஞர் பெருமக்கள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியில் தமிழ்ப் பண்பாட்டை பேணிப் பாதுகாப்பதுதான் தமிழ்நாடு அரசின் தலையாய கடமை என்று உலகுக்கு உணர்த்தும் வகையில், மூன்று முக்கியமான அறிவிப்புகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் வெளியிட விரும்புகிறேன்.

- செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாக புரிந்துகொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளிப் புதிர் பற்றி உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையைதெளிவாகபுரிந்துக்கொள்ள உதவும் வழிவகையை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும் என்பது முத்தான முதல் அறிவிப்பு!
- சிந்துவெளி பண்பாடு குறித்து தொடர் ஆராய்ச்சிகளை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ரோஜா முத்தையா நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும் வகையில் தலைசிறந்த தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் பெயரில் ஓர் ஆய்விருக்கை அமைக்க 2 கோடி ரூபாய் நல்கை வழங்கப்படும் என்பது இரண்டாவது அறிவிப்பு!
- தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகமே தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஓயாமல் உழைக்கும் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி, கல்வெட்டியல் ஆய்வாளர்கள், நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரையும் ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இது மூன்றாவது அறிவிப்பு.

இந்த மூன்று அறிவிப்புகளும் இந்தத் துறை ஆய்வுகளுக்கு வேகத்தையும், ஊக்கத்தையும் வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

சிந்துவெளி முதல் கீழடி வரை தமிழினத்தின் பெருமை நிரம்பி இருக்கிறது. பாவாணர், ராசமாணிக்கனார், க.த.திருநாவுக்கரசு போன்ற மாபெரும் அறிஞர்கள் எல்லாம் இது குறித்து எழுதியிருக்கிறார்கள். 'சிந்து முதல் வைகை வரை' என்ற நூலை நம்முடைய ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள் எழுதி இருக்கிறார். டோனி ஜோசப் அவர்கள் மரபணு, மானுடவியல் சார்ந்த ஆய்வுகளை வைத்து நிறைய எழுதிக்கொண்டு வருகிறார். இன்னும் ஏராளமான ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும் வந்து கொண்டிருக்கிறது.

அறிவியல் முறைப்படி சான்றுகள் அடிப்படையில், தமிழ்ச் சமூகத்தின் தொன்மையை அறிவுலகம் இப்போது ஏற்றுக்கொள்ளத் தொடங்கி இருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றைத் தமிழைத் தவிர்த்து விட்டு இனி எழுதமுடியாது என்று நாம் உரக்கச் சொல்வோம்! ஜான் மார்ஷல் அவர்களின் கண்டுபிடிப்பின் நூற்றாண்டில் அவருக்கு நாம் நன்றியை உரித்தாக்கி, அவர் விட்ட பணியை நாம் தொடர்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

முதல்வர் அறிவுரையேற்று – அனைத்து மருத்துவ காலிப் பணியிடங்களையும்

## விரைந்து நிரப்பிட கழக அரசு முனைப்பான நடவடிக்கை!

# பெரம்பலூர் உள்பட - தமிழ்நாட்டில் விரைவில் 3 புதிய மருத்துவக் கல்லூரிகள்!

**கொளக்காநத்தம் நிகழ்ச்சியில் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!**



**சென்னை, ஜன.6-**

**முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் பகுதியில் ரூ.50 இலட்சம் செலவில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.**

**அப்போது அவர் பேசுகையில், "ஒன்றிய அரசை வலியுறுத்தி விரைவில் தமிழ்நாட்டில் பெரம்பலூர் உள்பட 3 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.01.2025) பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதார அலகு புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் 300 இடங்களில் பொது சுகாதார அலகு கட்டிடம் கட்டும் பணிகள் கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதுவரை 150 இடங்களில் பொது சுகாதார அலகு கட்டிடம் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு உள்ளது. பொது சுகாதார அலகு கட்டிடத்தைப் பொறுத்தவரை 67 வகையான மருத்துவப் பரிசோதனைகள் செய்துக் கொள்ள ஆய்வகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தைப் பொறுத்தவரை இப்பகுதி மக்களின் மருத்துவப் பரிசோதனைகளான காசநோய், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய் பாதிப்புகளுக்கு பரிசோதனைகள் செய்வதற்குரிய பயனுள்ளதாக அமையும். இதுவரை 150 பொது சுகாதார அலகு கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள கொளக்காநத்தம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்திற்கு சிறப்பு ஒன்று அமைந்துள்ளது. காரணம் இப்பகுதி ஒன்றியக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி அவர்சார்ந்த ஊராட்சி நிதி ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு தந்து இம்மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகளை செய்து தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடம் இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்பிட கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்வரும் 2026ஆம் ஆண்டிற்குள் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களையும் சேர்த்து 2553 மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும் என்று இத்துறைக்கு அறிவுறுத்தி அந்தவகையில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் இன்று (05.01.2025) தேர்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் 156 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வு நடைபெற்று வருகிறது. மருத்துவர் பணியிடத்திற்கு 23,917 பேர் விண்ணப்பத்திருக்கிறார்கள். தேர்வில் வெற்றி பெரும் தகுதியான மருத்துவர்களுக்கு விரைவில் பணி நியமனம் வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள் மொத்த பணியிடம் 86, தற்போது பணிபுரியும் மருத்துவர்கள் 54, எனவே காலியிடமாக உள்ள 32 மருத்துவர் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும்.

இதயம் காப்போம் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவத்துறையின் மகத்தான திட்டங்களில் ஒன்றான இதயம் காப்போம் திட்டம் மிக பயனுள்ளதாக அமைந்துள்ளது. 2023 ஜீன் திங்கள் 07 ஆம் தேதி கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் என 10,000த்திற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் Loading Doses என்று சொல்லக்கூடிய இருதய பாதுகாப்பு மருந்துகள் கையிருப்பில் வைக்கப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதுவரை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் இருதயம் காப்போம் திட்டத்தின்மூலம் 13,673 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காப்பற்றப்பட்டிருக்கிறார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில் மட்டும் 289 பேர் இத்திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். கொளக்காநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மட்டும் 23 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் இன்னொரு கூடுதல் சிறப்பாக கீழப்புலியூர் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மிக விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் மற்றொரு கோரிக்கை ஒரு மருத்துவக்கல்லூரி வேண்டும் என்பது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைய நடவடிக்கை எடுத்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் இன்னும் புதிய 6 மருத்துவக்கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் பலமுறை கோரிக்கைகள் வைக்கப்பட்டது. தற்போது 3 மருத்துவக்கல்லூரிகளாவது அமைப்பதற்கு கோரிக்கை வைத்திருக்கிறோம். விரைவில் ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களை சந்தித்து 3 புதிய மருத்துவக்கல்லூரி அமைய கோரிக்கை வைக்க உள்ளோம். அதில் ஒன்று பெரம்பலூர் மாவட்டம் ஆகும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலர் வடிவேல் பிரபு, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதா, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.மகாலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திருவண்ணாமலை முருகையன்**
**சனவரி 6 (2003)**



**திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.**

**வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகப் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் - பொங்கல் பரிசு வழங்கல்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

*காஞ்சிபுரம், ஜன.6-*

*குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் தமிழர் திருநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா வருகின்ற 08.01.2025 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் படப்பையில் உள்ள தில்லை மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டம் ஒன்றிய கழக அவைத்தலைவர் மு.சுப்ரமணி தலைமையில், ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால் இ.மணி வாசுகிமகேஷ் சி.பார்த்தசாரதி வி.அரி மு.ராஜேந்திரன் மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர். பாலு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்குகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதாவேலு, பொன். ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், மலர்விழிதமிழ் அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், எஸ்.வைரம், ஜி.எ.ராயப்பா, தினேஷ்கந்தசாமி, ம.ரேவதி, என்.எஸ்.இளங்கோ, வி.எஸ். கோதண்டராமன், கே.என். சி.சத்தியமூர்த்தி, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் ரா.தீபக், மா.சே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, எல்.சுதாகர், இரா.குமரவேல், செ.பார்த்திபன், ஆர்.சையத்ரமிஸ், பொன்.இளையபாரதி, இ.பாலாஜி, மகாலட்சுமிஎட்டியப்பன், மல்லிகா நடராஜன், ஷோபாரகுநாதன், ஜி.இருசப்பன், ஏ.இ.பரசு ராமன், ம.அசோக்குமார், ஏ.இ. பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், மூ.குமார், வ.வீரபாண்டியன், ர.தமிழ்தாசன், க.யுவராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.*

*நிறைவாக ஒன்றிய இளைஞர்அணி அணி அமைப்பாளர் ப.அறிவொளி - ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அ.ஜமீர் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.*

*எனவே இக்கூட்டத்தில் ஒன்றிய கழகத்தில் அடங்கிய கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற மன்ற பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: தமிழர் திருநாள் பொங்கல் விழா, வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு, சட்டமன்ற தேர்தல் பணிகள், கழக வளர்ச்சிப் பணிகள்.*

*இவ்வாறு படப்பை ஆ.மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.*



நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம் மற்றும் அத்தனூர் பேரூர் மற்றும் வெண்ணந்தூர் பேரூரில் மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அவர்களது குடும்பத்தாருக்கு 'முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி' வழங்கும் நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அவர்களது குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நலநிதி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திராவிட இயக்கச் சிந்தனையாளர் – எழுத்தாளர் மதிமாறன், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர் கண்ணன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் விஜயபாஸ்கர், சார்பு அணி அமைப்பாளர்கள் சித்தார்த், கிருபாகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளம்பரிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் தொகுதி அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியம் தெற்கு ஒன்றியம் அச்சரப்பாக்கம் பேரூர் பி.எல்.ஏ.சி. ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.ஒன்றிய செயலாளர்கள் கே.கண்ணன்,ஜி.தம்பு, விடிஆர்வி. எழிலரசன்,மாவட்ட துணை செயலாளர் டி.வி.கோகுலகண்ணன்,மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் ஆலோசனை வழங்கினர்.தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன்,பொதுக்குழு உறுப்பினர் எஸ். உசேன்,அச்சிறுபாக்கம் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.